**மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் புகை பரீட்சித்தல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் புகை பரீட்சித்தல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்று உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அதனுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்லூரியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது கல்லூரியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் எனபவற்றிற்கு முகாமைத்துவத்தும் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வது எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாரள அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோளாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மெற்கொள்ளப்படும் பொருளதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்கு செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காயிவின் பகுதியொன்றாக, கணக்காயிவின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீட்டு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றை கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது

நிலைமைகளுடன் தொடர்புடைய பொருன்மையான நிச்சியமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணப்பாய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாக காணப்டுகின்றன. எவ்வாராயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்லூரியின் தொடர்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதினை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பினிவரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிமைக்கப்பட்ருபடபதனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக செய்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்மான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்க பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கடந்த வருடத்தில் மோட்டார் வாகனங்களின் மற்றும் புகைப் பரீட்சித்தல் உபகரணங்களின் திரண்ட பெறுமானத்தேய்வு ஒதுக்கத்தில் முறையே ரூபா 3,332,981 குறைத்தும், ரூபா 338,332 கூடுதலாகவும் கணக்கு வைக்கப்பட்டமை மீளாய்வாண்டின் போதும் திருத்தப்பட்டிருக்கவில்லை. | இறுதிக் கணக்கு மீதிகளின் பெறுமதி சரியானது ஆகும். சரியான சொத்துக்களின் பட்டோலையே கணக்காய்விற்கு வழங்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்களின் மற்றும் அதற்குரிய குறிப்புகளின் பெறுமதிகள் ஒன்றுக்கொன்று இணங்கும் வகையில் கணக்கு புத்தகங்களை பேணுதல். |

## 1.6 நிதியத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| அமைச்சரவை அனுமதியின் அடிப்படையில் கழிவுப் புகை வெளியேற்றல் பரீட்சிப்புப் பொறுப்பு நிதியத்தினை மூடுவதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் திறைசேரிச் செயலாளரின் 2018 ஒகஸ்ட் 18 ஆம் திகதியிலான 02/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறிருக்க, சுற்றறிக்கையின் பிரகாரம் முடிவுறுத்துபவர் ஒருவரை நியமித்து சொத்துக்களிலிருந்து பொறுப்புக்களைத் தீர்த்து மீதியை திரண்ட நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு 2021 மாரச் 15ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக நிதியத்திற்குச் சொந்தமான சேமிப்பு வைப்பின் பெறுமதி மட்டிலுமே ரூபா 686 மில்லியன் ஆகும். நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் கீழ் தாபிக்கப்பட்டிருந்த இந்த நிதியத்தின் இரு தரப்பில் திறைசேரி செயலாளர் ஒரு தரப்பினராவார். நிதியத்தினைத் தாபித்த பொறுப்பு உறுதியின் 11 (அ) பந்தியின் பிரகாரம், திறைசேரி செயலாளரினால் வெளியிடப்பட்டதன் அடிப்படையில் இது வரையிலும் குறித்த உடன்படிக்கை ஒப்பந்தத்திலிருந்து ஒரு தரப்பினர் வெளியேறியுள்ளனர். இதனால் நிதியத்தினைப் பேணுவது சட்ட ரீதியான சிக்களுக்குள்ளாகி உள்ளது. இதன் காரணமாக திறைசேரியின் பிரதி செயலாளரின் தலைமைத்துவத்தில் நம்பிக்கைப் பொறுப்பு சபை கூடி குறித்த நிதியத்திற்காக அமைச்சரவையின் தீர்மானத்தினை பெற்றுக்கொள்ளும் வரையிலும் நிதியத்தினை பேணிச் செல்வதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. | நிதியத்தினை தொடர்ந்தும் நடாத்திச் செல்வதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், திறைசேரியின் பிரதி செயலாளரின் தலைமைத்துவத்தில் நம்பிக்கைப் பொறுப்பு சபை கூடி குறித்த நிதியத்திற்காக அமைச்சரவையின் தீர்மானத்தினை பெற்றுக்கொள்ளும் வரையிலும் நிதியத்தினை பேணிச் செல்வதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. | குறித்த சட்ட ரீதியிலான சூழலினுள் தேவையான நடவடிக்கைகளை நிறைவேற்றல். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மைகள்.**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28ஆந் திகதிய 1/2020ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15ஆம் பந்தியினால் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 877(2) ஈ | கணக்காண்டு நிறைவடைந்து 02 மாதங்களினுள் செயலாற்றல் அறிக்கைகளை தயாரித்து அரச நிதிப் பணிப்பாளருக்கான பிரதிகளுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், அவ்வாறான செயலாற்றல் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020.08.28ஆந் திகதிய 01/2020ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், எதிர்காலத்தில் அறிக்கைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக்கொள்கின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயலாற்றல் பெறுபேறு ரூபா 250,382,868 ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 261,872,618 ஆகும். அதற்கமைய நிதி பெறுபேறுகளில் ரூபா 11,489,750 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. ஆண்டின் வருமானம் ரூபா 16,220,560 இனால் குறைவுற்றமை வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சஞ்சரிக்கும் காற்றின் தரத்தினை அளக்கும் 02 நிலையான கருவிகள் மற்றும் வளித்தரக் குறிகாட்டி காட்சிப்பலகை (Digital LED Display Board) 02 இனை கொள்வனவு செய்வதற்கான பெறுகைக்குரியதாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (i) தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.4.1 வழிகாட்டிக்கு முரணாக இந்த உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக முதலாவது தடவை 2013ஆம் ஆண்டின் | இதனூடாக நவீன அம்சங்களுடனான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இதன் பின்னர் பெறுகைகள் கால அட்டவணையின் பிரகாரம் | உச்ச செயலாற்றலினை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அரச நிதியினை பயன்படுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | போது விலைக்கேள்வி பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும், கொள்வனவு மேற்கொள்ளப்படாது மீண்டுமொரு தடைவ 2016ஆம் ஆண்டின் போது விலைக்கேள்வி கோரப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், 2018ஆம் ஆண்டின் போது விலைக்கேள்வி கோரும் போது முன்னைய சந்தர்ப்பங்களில் விலைக்கேள்வி சமர்ப்பித்த நிறுவனமொன்றிடமிருந்து கிடைதடத அதிக விலைகளின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட காரணத்தால் ரூபா 17,176,000 ஆன நிதி ரீதியான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | செயற்படுகின்றேன். | |
| (ii) | தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.2.2 (அ) வழிகாட்டிக்கு அமைவாக பெறுகை அறிவித்தல், தேசிய பெறுகைகள் முகவரகத்தின் வலைதளத்தில் பிரசுரிக்கப்பட்டிராததுடன், 2016ஆம் ஆண்டின் போது ரூபா 240,982 செலுத்தி அந்த 11 அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், குறித்த பெறுகை இரத்துச் செய்யப்பட்டமையால் செலவிடப்பட்ட அந்த பணம் விளைவற்றதாகியிருந்தது. | பல்வேறு நிறுவனங்களிடமிருந்து பல் விலைக்கேள்விகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் அதிகளவில் விற்பனையாகும் பிரதான பத்திரிகைகளில் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டது. | உச்ச செயலாற்றலினை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அரச நிதியினை பயன்படுத்தல். |
| (iii) | கொள்வனவு செய்யப்பட்ட சஞ்சரிக்கும் காற்றின் தரத்தினை அளக்கும் 02 நிலையான கருவிகள் மற்றும் வளித்தரக் குறிகாட்டி காட்சிப்பலகைகள் 02 மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், எஞ்சிய நடமாடும் சஞ்சரிக்கும் வாயுப் பிரிவு தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிறுவனங்களால் சேகரிக்கப்பட்ட தரவுகள் 2019ஆம் ஆண்டு முதல் புகைப் பரீட்சித்தல் நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட போதிலும், | அந்த இயந்திரங்களின் முழு உரித்தினை மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்திற்னு வழற்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | உச்ச செயலாற்றலினை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அரச நிதியினை பயன்படுத்தல். |

| | | |
|---|---|---|
| அந்த தரவுகளை ஆக்கபூர்வமான முறையில் வளியின் தரத்தினை முகாமை செய்வதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. மேலும், மொத்தக் கொள்வனவுக் கிரயமான ரூபா 130 மில்லியனான இந்த உபகரணங்களின் பாதுகாப்பு, பயன்பாடு, பராமரிப்பு, அளவீடுகளை பெற்றுக்கொள்ளல், தரவுகளை பரிமாற்றல் ஆகியவை தொடர்பில் இணக்கம் ஏற்படும் வகையில் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுவதற்கு நிதியத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) புகைப் பரீட்சித்தல் சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய கண்காணிப்பு பணிகளுக்கு தலைமை அலுவலகம் நீங்கலாக 2012ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் இந்த நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேறு பணிகள் காணப்பட்டதாக அவதானிக்கப்படவில்லை. அதன் காரணமாக கீழ்வருமாறு பல்வேறு பணிகளுக்காக நிதியத்தினால் செலவிடப்பட்ட ரூபா 333 மில்லியன் விளைவற்ற செலவினமொன்றாகியிருந்தது. | | |
| (i) மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்ட உபகரணங்களும் உள்ளடங்களான ரூபா 237 மில்லியன் செலவிடப்பட்டு சஞ்சரிக்கும் வளியின் தரத்தினை பரிசோதிக்கும் உபகரணங்களை கொள்வனவு செய்தல். | வளியின் தரத்தினை பரிசோதிப்பதற்காக வளியின் தரத்தினை பரிசோதிக்கும் உபகரணங்களை கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. | உச்ச செயலாற்றலினை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அரச நிதியினை பயன்படுத்தல். |
| (ii) டீசல் மற்றும் பெற்றோல் என்ஜின்களை பரிசோதிப்பதற்காக முறையே 43 ஒளிப்புகாநிலை மானிகள் (Opacity Meters) மற்றும் 32 வளிப் பகுப்பாய்வுக் கருவிகள் (Gas Analyzers) ரூபா 72,628,764 கொள்வனவு செய்தல். | பதில்கள் முழுமையாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (iii) | ரூபா 23,020,650 செலவிடப்பட்டு வளி மாசடைதலை மதிப்பீடு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட 02 ஆராய்ச்சிகளின் அறிக்கைகள் கிடைக்காமை மற்றும் மேலும் 02 ஆராய்ச்சிகளின் அறிக்கைகள் கிடைத்திருந்த போதிலும், அதில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் இதுவரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | குறித்த அறிக்கைகளை துரிதமாக பெற்றுக்கொள்கின்றேன். கிடைத்த ரோய்ச்சி அறிக்கைகள் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்காக வளித் தர முகாமைத்துவ நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | - மேற்படி - |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிலையான வைப்புகளில் உயர்ந்த வட்டிக்கு முதலீடு செய்யப்பட்ட ரூபா 1,270,934,392 மீளாய்வாண்டில் அகற்றப்பட்டு சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. இதனால் அதிக வட்டித் தொகையைப் பெறக் கூடிய இலாபகரமான நிலைமையை நிதியம் இழந்துள்ளது. | நாட்டில் நிலவிய தொற்றுநோய் நிலமை காரணமாக வீட்டிலிருந்தவாறே வேலை செய்தமையால் திரண்ட நிதியத்திற்கு ரூபா 750 மில்லியன் செலவு வைக்கப்பட்டமையாலும், மேற்படித் தொகையை முதலீடு செய்ய இயலாதிருந்தது. கணக்காய்வில் சுட்டிக் காண்பிக்கப்பட்டவாறு மிகைப் பணத்தை ஆக்கபூர்வமாக முதலீடு செய்ய பதிவு செய்துகொள்ளப்பட்டது. | அரச நிதியினை இலாபமான விதத்தில் ஈடுபடுத்தல். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசு |
|---|---|---|
| 04 பிரதான செலவின விடயங்களின் மிகை மதிப்பீடு செய்யப்பட்ட காரணத்தால் 69 சதவீதம் தொடக்கம் 99 சதவீதம் வரையான வீச்சில் சேமிப்புகள் காணப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவியாக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | தொற்றுநோய் நிலமை காரணமாக திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை நிறைவேற்ற முடியாதிருந்தது. கணக்காய்வில் சுட்டிக் காண்பிக்கப்பட்டவாறு பாதீட்டினை ஆக்கபூர்வமான முறையில் முகாமை செய்வதற்காக குறித்து வைத்துக்கொள்ளப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமான முறையில் பாதீட்டு தொகைகள் தீர்மானிக்கப்படல். |